**செய்தி வெளியீடு எண்:524** **நாள்: 10.08.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.8.2017) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் தயாரிக்கப்பட்ட ''ஹஜ்ஜும் உம்ராவும் 2017'' என்ற வழிகாட்டி புத்தகத்தை தமிழக ஹஜ் பயணிகளின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவானது, தமிழ்நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ் பயணத்திற்கான நபர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல், ஹஜ் குழு பயணத்திற்கான விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை வழங்குதல், ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்சி முகாம்களை நடத்துதல், மக்கா மற்றம் மதினா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல், போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் ''ஹஜ்ஜும் உம்ராவும்'' என்ற வழிகாட்டி புத்தகம் ஒவ்வொரு ஆண்டும் தமிழில் வெளியிடப்பட்டு தமிழக ஹஜ் பயணிகளின் பயன்பாட்டிற்காக இலவசமாக வழங்கப்படுகிறது.

2017ஆம் ஆண்டிற்கான புனித ஹஜ் பயணம் 13.8.2017 அன்று துவங்க உள்ளது. ஹஜ் பயணிகளுக்காக சென்னை புறப்பாட்டுத் தளத்திலிருந்து 11 விமானங்கள் இயக்கப்படவுள்ளன. இப்புனித ஹஜ் பயணத்திற்கு தமிழகத்தில் இருந்து சுமார் 3325 இஸ்லாமியர்கள் சவுதி அரேபியாவில் உள்ள மக்கா புனித ஸ்தலத்திற்கு செல்லவுள்ளனர். இந்த ஹஜ் பயணிகளின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் தயாரிக்கப்பட்ட ''ஹஜ்ஜும் உம்ராவும் 2017'' என்ற வழிகாட்டி புத்தகத்தை வெளியிட்டு 7 தமிழக ஹஜ் பயணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று நேரில் வழங்கினார்கள்.

இந்த வழிகாட்டி புத்தகத்தில், இஹ்ராம் அணிந்து ஹஜ் மற்றும் உம்ரா செய்யும் முறைகள் பற்றியும், மினா, அரபா, முஸ்தலிபா, ஜம்ராத் மற்றும் மதினாவில் கடைபிடிக்கப்பட

வேண்டிய நடைமுறைகள் பற்றியும், மக்கா மற்றும் மதினாவில் ஹஜ் பயணிகள் தங்கும் குறுகிய காலத்தில் அரபு மொழியில் உரையாடுவதற்குத் தேவையான அத்தியாவசியமான அரபிச் சொற்கள், அதன் பொருள்கள் போன்ற ஹஜ் பயணிகளுக்கு தேவையான பயனுள்ள விவரங்கள் உள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு தொழிலாளர் நலம் (ம) வக்பு துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஹஜ் குழு தலைவர் திரு. ஏ. அப்துல் ஜப்பார், முதன்மைச் செயலாளர் / தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயல் அலுவலர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 10.8.2017